# IV. அலுவலகப் பணியாளர்

ஆளுநர் டபிள்யூ. தென்னக்கோன் தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டிற் கலந்து கொள்வதற்காக 1970 சனவரி 12ஆந் திகதி இலங்கையை விட்டுத் தாய்லாந்து சென்று 1970 சனவரி 19ஆந் திகதி திரும்பினுர்.

பன்னுட்டு நாணய நிதியின் இலங்கையின் மாற்றீட்டு ஆளுநராகப் பணி யாற்றும் ஆளுநர், பன்னுட்டு நாணய நிதியினதும் பன்னுட்டுப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கியினதும் இலங்கை ஆளுநரான நிதியமைச்சர், மாண்புமிகு கலாநிதி என். எம். பேரேரா நா. உ. உடன் கொப்பன்கேகனில் நடைபெற்ற பன்னுட்டு நாணய நிதியினதும், பன்னுட்டுப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி யினதும் ஆண்டுக் கூட்டத்திற்குச் சென்ருர். இவர் 1970, செத்தெம்பர் 15 ஆந் திகதி இலங்கையைவிட்டுச் சென்று 1970 செத்தெம்பர் 30ஆம் திகதி திரும்பினுர்.

ஆளுநர் நாட்டிலில்லாத மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது மூத்த துணை ஆளுநர் திரு. எஸ். ஈ. பி. ஜான்ஸ், நாணய விதிச் சட்டத்தின் 24ஆம் பிரிவிற்கிணங்க வங்கியின் முதன்மை நிறைவேற்றும் அலுவலராகப் பணி யாற்றினுர்.

பன்னுட்டு நாணய நிதியினதும், பன்னுட்டுப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கியினதும் கூட்டங்களிற் கலந்துகொள்வதற்காக, நிதியமைச்சரின் நிரந் தரச் செயலாளர் திரு. மு. இராசேந்திரா இலங்கையைவிட்டுச் சென்ற காலப் பகுதியின்போது, அவருக்குப் பதிலாகக் கடமையாற்றிய இறைசேரி யின் துணைச் செயலாளரான திரு. சி. ஏ. கூறே அக்காலப்பகுதியில் நாணயச் சபையின் அரசகரும உறுப்பினராகக் கடமையாற்றினுர்.

திட்டப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாள ராக அரசாங்கப் பணியிலிருந்த கலாநிதி காமினி கொறியா 1970, யூன் 11ஆந் திகதியிலிருந்து துணை ஆளுநராக மத்திய வங்கியிற் கடமையேற்ருர். இவர் நியூயோர்க்கில் உள்ள வர்த்தக அபிவிருத்திக் குழுமீதான ஐக்கிய நாடுகள் குழுவில் நியமனமொன்றினை ஏற்பதற்காக 1970 ஒற்ருேபர் தொடக் கம் வங்கிப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்; பின்னர் 1970 திசெம்பர் 14ஆந் திகதி தொடக்கம் மத்திய வங்கியில் மீண்டும் கடமையேற்ருர்.

உட்டுறைக் கணக்காய்வாளரான திரு. ஓ. பி. குணவர்த்தன 1970, ஏப் பிறல் 25ஆந் திகதியிலிருந்து ஓய்வு பெற்ருர். திரு. ஓ. பி. குணவர்த்தன ஓய்வு பெறுவதற்கு முன் விடுமுறையிற் சென்ற 1970 சனவரி 25ஆந் திகதி தொடக்கம் செயலாளரான திரு. ஏ. சி. பி. குணசேகர உட்டுறைக் கணக் காய்வாளராகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டார்.

ஊழியர் சேமநிதிக் கண்காணிப்பாளரான திரு. எச். எல். டி. செல்வ ரத்தினம் 1970, யூலை 1ஆந் திகதியிலிருந்து உட்டுறைக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டார்.

பணியாளரகப் பணிப்பாளரான திரு. எல். டபிள்யூ. ஏ. வீரசேகர 1970, யூலை 1ஆந் திகதியிலிருந்து பொதுப்படுகடன் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளரான திரு. சி. எச். பர்ணுந்து 1970 யூலை 1ஆந் திகதியிலிருந்து ஊழியர் சேமநிதிக் கண்காணிப்பாளராக நியமிக் கப்பட்டார்.

பொதுப்படுகடன் கண்காணிப்பாளரான திரு. பி. எச். சிறிவர்த்தன 1970, யூலை 1ஆந் திகதியிலிருந்து மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

திட்டமிடல் தொழில்வசதி அமைச்சுக்குப் பணியாற்ற விடப்பட்ட திரு. எம். எம். செனிவிரத்ன 1970 யூலை 1ஆந் திகதியிலிருந்து வங்கிப் பணியி னின்றும் ஓய்வுபெற்ருர்.

பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளரான கலாநிதி டபிள்யூ. இராச புத்திரம் பாங்கொக்கிலுள்ள பன்னுட்டுத் தொழில் அமைப்பின் வேலையாட் டொகை திட்டமிடல் நிறுவனக் கிளையில் பொருளாதாரத் திட்டமிடல் நிபுணராக நியமனம் ஏற்பதற்கு விடுவிக்கப்பட்டார். இவரில்லாதபோது கடமையாற்றுவதற்கு 1970 ஒற்ரோபர் 21ஆந் திகதி தொடக்கம் பொருளா தாரத் துணைப்பணிப்பாளராகிய திரு. எச். என். எஸ். கருணதிலக பொரு ளாதார ஆராய்ச்சிப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

துணைச் செயலாளர் திரு. ஈ. எரமுதுகொல்ல 1970 யூலை 1ஆந் திகதி தொடக்கம் பணியாளராகப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

மூத்த துணைச் செலாவணிக் கட்டுப்பாட்டாளரான திரு. க. கனகசபாபதி 1970, யூலை 1ஆந் திகதி தொடக்கம் பதில் செலாவணிக் கட்டுப்பாட்டாள ராக நியமிக்கப்பட்டார்.

பாங்கொக்கிலுள்ள தூரகிழக்காசிய பொருளாதார ஆணைக் குழுவின் ஆராய்ச்சி, திட்டமிடல் பகுதியில் பிரதேசத் திட்ட வழிப்படுத்தல் உசாத் துணைவராகக் கடமையாற்றிய கலாநிதி எஸ். பீ. டி. சில்வா, 1970 ஒகத்து 10ஆந் திகதி தொடக்கம் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சின் பொருளாதார மதியுரையாளராகக் கடமைகளை ஏற்ருர்.

திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சில் பணியாற்றுவதற்கு விடுவிக்கப்பட் டிருந்த திரு. டி. ஆர். சிறிவர்த்தன, 1970 ஒற்ரோபர் 1ஆந் திகதி தொடக் கம் வங்கிப் பணியில் மீண்டும் சேர்ந்து கொண்டார்.

பன்னுட்டு நாணய நிதியின் பணியிலிருந்த திரு. எம். சுவாமிநாதன் 1970, பெப்புருவரி 16ஆந் திகதி தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து விலகிக் கொண்டார்.

சவூதி அரேபியாவில் தேசியக் கணக்குகள் பொருளாதாரப் புள்ளி விவ ரங்களின் மதியுரையாளர் பதவியை ஏற்பதற்காக 1970 யூலை 4ஆந் திகதி தொடக்கம் ஓராண்டு காலத்துக்கு திரு. பீ. பீ. டி. எம். பெரேரா ஐக்கிய நாட்டு நிறுவனப் பணிக்கு விடப்பட்டார்.

பாங்கொக்கில் தூரகிழக்கு ஆசிய பொருளாதார ஆணைக்குழுவின் பணியி லிருந்து திரு. சி. ஏ. பீ. என். ஜெயராசா 1970, டிசெம்பர் 28ஆந் திகதி தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து விலகிக் கொண்டார்.

ஆய்வுக்குரிய ஆண்டில் பின்வரும் மத்திய வங்கி அலுவலர்கள் அரசாங்க, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் பணிகளுக்கு விடுக்கப்பட்டனர்.

நிதியமைச்சு — திருவாளர்கள் எச். ஆர். டி சொயிசா, பி. சி. முனசிங்க, எச். எம். ஆர். எல்லப்பொல.

வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு — கலாநிதி எஸ். ரி. ஜி. பர்ணுந்து.

கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சு — கலாநிதி எஸ். பீ. டி. டி சில்வா.

திட்டமிடல் வேலைவசதி அமைச்சு — திரு. எம். எம். செனிவிரத்ன, திரு. டி. ஆர். சிறிவர்தன, கலாநிதி என். இராமச்சந்திரன், கலாநிதி உஸ்வத்தை ஆராய்ச்சி, திரு. என். எம். கப்பா கொடை, திரு. எஸ். எம். பி. சூரியாராய்ச்சி, திரு. பி. எம். ஹசன்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு — திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன.

பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு — திரு. பி. எச். சிறிவர்த்தன.

கப்பற்ருெழில் சுற்றுலாப் பயண அமைச்சு — திரு. பி. பீ. கரந்தவெல.